<u>கம்பம் நகராட்சி</u>

**2019–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் (12.09.2019) ஆம் நாள் வியாழன்கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

<u>கூட்டப் பொருட்கள்</u>

**1.** கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020ன் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்திட சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 17349/2019/இ3–ன் 03.09.2019ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | : | ரூ. 3.50 கோடி |
| மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மான்ய நிதி/ நில அபிவிருத்தி கட்டணம் | : | ரூ. 3.50 கோடி |
| நகராட்சி பங்களிப்பு தொகை | : | ரூ. 3.00 கோடி |
| **மொத்த மதிப்பீட்டுத் தொகை** | **:** | **ரூ. 10.00 கோடி** |

மேற்கண்ட நிதிஆதார பங்கீட்டின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு விரிவான திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | Providing B.T. Surface CMP at Wd-3 L.F. Road Cross Street Extention area, Wd-31 Gandhi nagar Extention area, Wd-29 Manchakulam Road Extention area, Wd-01 Vivekanandhar street Extention area and Construction of Storm Water Drain at Gandhi nagar in Wd. No. 31 with culvert in Cumbum (Package-I) | 200.00 |
| 2. | Providing B.T. Surface by CMP surface at Wd-28 V.M Chavadi Street (Bindhu Nagar) Extention area, Wd-33-Muthuramalingam Nagar Extention area, Wd-19- Kalavasal Street Extention area, Wd-31- L.F. Road Extentin area and Construction of Storm Water Drain in Wd-19 Kalavasal Cross Street with Culvert in Cumbum Municipality. (Package- II) | 200.00 |
| 3. | Providing B.T. Surface by CMP at Wd-29 Ranger office road Cross Street Extention area, Wd-31 - CMS Nagar Main and Cross Street Extention area and Construction of Storm Water Drain at Wd-29 Ranger office road cross street and Construction of RCC culvert at Wd-04, Odai street in Cumbum Municipality. (Package-III) | 200.00 |

| | | |
|---|---|---|
| 4. | Providing B.T. Surface by CMP at Wd-03- Kurungumayan Street Extention area, Wd-09- Subramaniya Samy Kovil Street Extention area, Wd-31- Kakkan Colony Extention area, Wd-04 - K.K. Patti Road Extention area, Wd-33 - Egaluthu road Cross Street and Construction of Storm Water Drain with Culvert at Wd-9 Subramaniyasamy Kovil Street and Kurungumayan Cross Street in Cumbum Municipality.(Package-IV) | 200.00 |
| 5. | Providing B.T. Surface by CMP at Wd-31 Nandhagopal Nagar Cross Street Extention area and Wd-4 Malayammal Puram Cross Street Extention area and Construction of Storm Water Drain with Culvert at Wd-31 Nandhagopal nagar Main Street in Cumbum Municipality. (Package-V) | 200.00 |
| | மொத்தம் | 1000.00 |

மேற்கண்டவாறு நிதி ஆதார பங்கீட்டின் அடிப்படையில் ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2649/2019/இ1) |
| 2. | இந்நகராட்சிக்கு சொந்தமான முகைதீன் ஆண்டவர்புரம் துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி மேல்தளம் மற்றும் தரைதளம் டைல்ஸ் அமைத்தும், பராமரிப்பு செய்த கட்டிடங்களுக்கு மின்வசதி மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைத்திடும் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) செலவினத்தில் கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4–ல் ஓடைபாலம் பக்கவாட்டு சுவர் சாலையின் ஒருபுறம் உடைந்து பழுதாகியதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு பொதுமக்களுக்கு மிகுந்த சிரமமாக உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும், பழுதாகியுள்ள ஓடைபாலத்தின் பக்கவாட்டு சுவர் சரிசெய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 1.50 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியினை பொதுநிதி 2019–2020ன் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |
| 4. | இந்நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையின் தென்புறம் 14 எண்ணம் மற்றும் வடக்குபகுதியில் 18 எண்ணம் காலியான உடைந்த ஒட்டு சாப்புடன் கூடிய பழுதடைந்த கீழே விழும் நிலையில் இரு கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்த அனுமதி கோரியுள்ளதன்பேரில், மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6024/2017/பி2, நாள். 26.08.2019–ன்படி மேற்படி பழுதடைந்த பயனற்ற கட்டிடங்களை உரிய பாதுகாப்பு உபகரணங்களோடு அப்புறப்படுத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, மேற்கண்டுள்ளவாறு காலியான உடைந்த ஒட்டு சாப்புடன் கூடிய பழுதடைந்த கீழே விழும் நிலையில் இரு கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தவும் பயன்படுத்தக்கூடிய உபயோகமான பொருட்களை அலுவலகத்தில் சேர்த்திட வும் மற்றும் சிமிண்ட் தளம் அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |

**5.** உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுரடி பரப்பளவிற்கு மேற்படாத நிலத்தில் 1200 சதுரடி பரப்பளவிற்குள் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்கள் களஆய்வின்றி எளிய முறையில் ஆவணங்களின் அடிப்படையில் இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.110 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.08.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அரசாணையினை செயல்படுத்தும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.28880/2018/டிபி3, நாள்.20.09.2019–இல் இணையதளம் வாயிலாக 2500 சதுரடிக்கு மிகாத கட்டிட அனுமதிக்கான அனுமதி கட்டணம் , வளர்ச்சி கட்டணம் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பிற்கான வைப்புத்தொகைகள் நிர்ணயம் செய்து வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி கீழ்கண்ட விவரப்படி கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Scrutiny fees as per TNCBR | Rs.2.00 / Per sqm |
| 2 | B.L. Fees | GF Rs.50/- Per sqm |
| | | FF Rs.50/- per sqm |
| | | |
| | Any other fees (Specify here) | Entry Level Fees - Rs.500/- |
| | | Compound wall - 150/10 sm |
| | | WC - 150/1 No |
| | | Septic Tank - 225/ 1 No |
| | | Stair case - 300/1 No |
| | Stocking of Building Materials on the Road side and C&D Waste Collection Charsges From added 50% of Building fees Add - 50% | Total - |
| 3 | **Deposit for RWH** | |
| | **Residencial Building ;**<br>1) Up to 500Sq.f<br>2) From 500 Sq.f Up to 1200 Sq.f<br>3) From 1200 Sq.f Up to 2400<br>4) 2400 Sq.f and Above<br>**Commercial Building;**<br>1) Up to 1000Sq.f<br>2) From 1000 Sq.f Up to 2000 Sq.f<br>3) From 2000 Sq.f Up to 3000<br>4) 3000 Sq.f and Above | Rs.5000/-<br>Rs.7500/-<br>Rs.10000/-<br>Rs.15000/-<br><br>Rs.10000/-<br>Rs.20000/-<br>Rs.25000/-<br>Rs.35000/- |
| 4 | Deposit for UGSS | NIL |
| 5 | Display Board (1 No) | Rs. 10,000/- |
| 6 | M.W.W.F 1% of Estimate cost | As per PWD rate (Average) |

| | | | |
|---|---|---|---|
| 7 | **Development charges** | | |
| | Building Area | Rs.4.00 / sqm | |
| | Land | Rs.10.00 / sqm | |
| | | | |

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2883/2019/எப்1)** |
| **6.** | இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் முதல் நிலை குப்பை சேகரம் செய்ய பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் **(**BOV**) 31** எண்ணம் விநியோகம் செய்யப்பட்டு இந்நகராட்சி சுகாதார பிரிவின் மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் அவ்வப்போது ஏற்படும் சிறுபழுதுகள் (பெரிய பழுதுகள் தவிர) மற்றும் சர்வீஸ் செய்யும் பணிகள் **01.11.2019** முதல் **31.10.2020** வரை ஒராண்டு காலத்திற்கு ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தில் (Annual Maintenance Contract) செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. **6.00** இலட்சத்தில் பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |
| **7.** | இந்நகராட்சி புதிய உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளை பயோமைனிங் முறையில் பிரித்தெடுக்கும் குப்பைகளில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பேப்பர் காட்டன் பாக்ஸ் போன்றவற்றினை Bailing Machine –ல் வைத்து பேக்கிங் செய்வதற்கு ஏதுவாக இந்நகராட்சிக்கு புதியதாக ஒரு Bailing Machine – வாங்கிட உத்தேச செலவு தொகை ரூ. **4,95,000/–**செலவினத்தில் பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |
| **8.** | இந்நகராட்சிக்கு சொந்தமான கம்பம் – குமுளி ரோட்டில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் குப்பைகளை பயோமைனிங் முறையில் அகற்றுவதற்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டு குப்பை கழிவுகள் சலித்து கழிவு செய்யப்பட்டு வரும் நிலையில், இயந்திரத்தில் பணியாளர்கள் பாதுகாப்புடன் பணிபுரிவதற்கு ஏதுவாக மோட்டார் சைடு பக்கம் இரும்பு வேலி அமைத்திடவும் மற்றும் ஆங்கூர்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்தில் உள்ள இயந்திரங்கள் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்து Exhaust Fan அமைத்திடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 5,00,000/–ல் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |
| **9.** | இந்நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டிற்க்கு வரப்பட்ட பேட்டரி வாகனங்களை மின்னுட்டல் செய்ய தேவையான பிளக் பாயின்ட்கள் அலுவலக வளாகம் ஆடு தொட்டி ஆங்கூர்பாளையம் ரோடு மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் ஆகிய இடங்களில் நிறுவிட ரூபாய் **70000/–**க்கு (ஜி,எஸ்,டி, வரி உட்பட) தயார் செய்த மதீப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை **2019–2020** பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |

| | |
|---|---|
| 10. | இந்நகராட்சி சுருளிப்பட்டி ரோடு குடிநீரேற்று நிலையத்தில் வண்ணாத்திபாறை துணைமின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறப்பட்டதால் தினசரி 10 மணிநேரத்திற்கும் அதிகமாக மின்தடை ஆனதால், தொடர்ந்த குடிநீர் பம்பிங் செய்வதில் சிரமம் இருந்த நிலையில் தற்போது 26.7.2019ம் தேதி முதல் கம்பம் நகரிலிருந்து தனி உயர் அழுத்த மின் பாதை அமைத்து 24 மணி நேர மும்முனை மின்சாரம் பெறப்பட்டதால் தடையின்றி இரவும் பகலும் குடிநீர் பம்பிங் செய்வதை கண்காணிக்கவும், பாதுகாப்பு வசதிக்காகவும் அவ்விடத்தில் யூபிஎஸ் பேட்டரி மற்றும் வளைதள இணைணப்புடன் கூடிய ஆறு கண்காணிப்பு கேமராக்கள் அமைக்க ரூபாய் 135000/ க்கு (ஜி.எஸ்.டி வரி உட்பட)தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : 1. குடிநிரேற்று நிலைய பாதுகாப்பு, மின் மோட்டார் இயக்க கண்காணிப்பு பணியின் முக்கியத்துவம் கருதி மதிப்பீட்ற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை 2019–2020 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |
| 11. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டு பகுதிகளில் உள்ள தூர்ந்து போன போர்வெல் (அடிபம்பு ) மழைநீர் சேகரிப்பு 20 எண்ணம், மினி பவர் பம்ப் 15 எண்ணம் , புதிய பேருந்து நிலையத்தில் 8 எண்ணம் , அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள நோயாளிகளுடன் உடன் வருவோர் தங்கும் விடுதி 9 எண்ணம், தேரடி பள்ளி 6 எண்ணம், தாத்தப்பன் பள்ளி வளாகம் 9 எண்ணம், நந்த கோபாலன் தொட்டி வளாகம் , காந்திநகர் தொட்டி வளாகம், வடக்குபட்டி தொட்டி வளாகம், ஆர்.சி.எச்.மருத்துவமனை வளாகம் பகுதிகளில் மழை நீர் சேகரிப்பு அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூபாய் 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை 2019 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் |
| 12. | இந்நகராட்சியில் மொத்தம் 2340 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் மாரியம்மன் கோயில் முன்பு, எல்.எப்.ரோடு சிக்னல் அருகில், எல்.எப்.ரோடு காந்திசிலை அருகில் ஆகிய மூன்று மிக முக்கிய பொதுமக்கள் கூடும் இடங்களில் உள்ள உயர் மின் கோபுர விளக்கில் மொத்தம் 23, 400 வாட்ஸ் மெட்டல் காலைடு(எம்.எச்.) விளக்குகள் உள்ளன. தற்போது அனைத்து இடங்களிலும் மின் சிக்கன விளக்குகளாக சி.எப்.எல், டி5, எல்.இ.டி. ஆக உள்ளதால் மேற்படி விளக்குகளை பராமரிக்க தேவையான உதிரி பாகங்கள் வெளி சந்தையில் கிடைப்பதில் சிரமம் ஆவதால், எரியாத எம்.எச். விளக்குகளை பராமரிப்பதில் சிரமமும், அதேநேரத்தில் மின் பயன்பாடும் அதிகமாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மூன்று இடங்களில் உயர் மின் கோபுர விளக்கில் உள்ள 23 எம்.எச். விளக்குகளை 150 வாட்ஸ் திறனுடைய எல்.இ.டி. விளக்குகளாக மாற்றம் செய்ய அனுமதியும், அதற்கான மதிப்பீடு ரூபாய் 4.98 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : 1. பொதுமக்கள் அதிக போக்குவரத்து உள்ள இடமாகவும், மாரியம்மன் கோயில் முன்பு உள்ள சந்திப்பான இடம் பேருந்து நிலைய வழித்தடமாகவும், பண்டிகை மற்றும் விழாக்காலங்களில் இரவு முழுவதும் மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடமாகவும் மூன்று இடங்களும் அமைந்துள்ளதால் அவ்விடத்தில் எரியாமல் உள்ள எம்.எச். விளக்கினை எல்.இ.டி ஆக மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை 2019 2020 பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |

**13.** இந்நகராட்சி சுருளிப்பட்டி ரோடு நீரேற்று நிலையத்தில் நீர் உந்து விசைக்கு இரண்டு 30 எச்.பி. மோட்டார்களும், ஒரு 60 எச்.பி.மோட்டாரும் ஆக மூன்று மோட்டார்கள் இயக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மூன்று மோட்டார்களில் ஒரு மோட்டாரில் பழுது ஏற்பட்டால் அதனை கழற்றி சரி செய்து மீண்டும் பொருத்தி இயக்க குறைந்தது ஒரு வாரகாலம் ஆகிவிடுகிறது. இதனால் மீதி உள்ள இரண்டு மோட்டார்களை ஒரேநேரத்தில் தொடர்ந்து தடையின்றி இயக்க முடியாமல் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் தாமதம் ஆகிறது. மேலும் தற்போது 26.07.2019 ம் தேதி முதல் 24 மணி நேர மும்முனை மின்சாரம் பெறப்பட்டதால் மோட்டார்கள் இரவும் பகலும் நிற்காமல் இயக்கம் ஆவதால், செயல்பாட்டில் உள்ள மோட்டார்கள் பழுது ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு குறைவின்றி பொதுமக்க்ளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய மேலும் ஒரு புதியதாக 30 எச்.பி திறன் கொண்ட மோட்டார் ஒன்று பொருத்தினால், இரண்டு மோட்ார்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கும், அடுத்து உள்ள இரண்டு மோட்டார்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கும் மாற்றி மாற்றி தடையின்றி இயக்க வசதியாகவும், மோட்டார்கள் ஏதேனும் பழுதானால் தொடர் இயக்க நிலைக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் குடிநீர் பம்பிங் செய்ய இயலும் என்பதால், கூடுதலாக 30 எச்.பி.திறனில் நீர் உந்து விசைக்கு ஒரு மோட்டார் பொருத்த ரூபாய் 4.70 லட்சத்திற்கு தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர் தேவையை கருதி செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை 2019 2020 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**14.** இந்நகராட்சி சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் அம்மா உணவகத்தில் உள்ள நீராவி பாய்லர், குளிர்சாதனப்பெட்டி, சமையல் குக்கர்கள், கிரைண்டர்கள் அகியவை பழுதாகி சமையல் செய்ய இயலாத நிலை உள்ளதால், அவற்றை பொதுமக்கள் நலன் கருதி பராமரிப்பு பணிகள் செய்ய ரூபாய் 110000/ க்கு (ஜி.எஸ்.டி வரி உட்பட)தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :1. பொதுமக்கள் நலன் கருதி செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை 2019–2020 ஆம் ஆண்டு பொது நிதி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**15.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வரிவிதிப்புதாரர்களிடையே மழைநீர் சேகரிப்பு அமைப்பினை ஏற்படுத்தும் பொருட்டு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கவும், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், விழிப்புணர்வு பதாகைகள், பிளக்ஸ் பேனர்கள் அமைக்கவும் விலைப்புள்ளிகள் கோரப்பட்டிருந்தது. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | அறிவிப்பு நோட்டீஸ் 100 அசல் மற்றும் 100 பிரதிக்கான விலை ரூ. | 6 x 3 அளவுள்ள பிளக்ஸ் பேனர் ஒன்றுக்கான விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | நியூ எஸ்டீம் பிரஸ் | 350 .00 | 900.00 |
| 2 | மல்லிகை பிரிண்டிங் பிரஸ் | 385.00 | 960.00 |

**அலுவலகக்குறிப்பு**: குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நியூ எஸ்டீம் பிரஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**16.** இந்நகராட்சிக்கு 2019–2020 ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக மன்ற தீர்மானம் அனுப்ப கோரியதன்படி , இந்நகராட்சி பகுதியில் திட்ட பிரேரணை செய்து புக் பைண்டிங் வடிவில் அமைத்திடவும், கணிணியில் கலர் புகைப்படம் மற்றும் வரைபடம் எடுத்து **சிப்பம்–1** பணிகள் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் செய்திட ஏதுவாக , கீழ்கண்ட நிறுவனங்களில் கலர்பிரிண்டிங் மற்றும் பைண்டிங் செய்திட உத்தேச செலவினம் ரூ. 50,000/–ல் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை பட்டியல் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | DRAMS Engineers & Contractors,<br>Er. D. AHMED ASHIQ. D.C.E.,<br>3D/2 Opp, Saleema Hospital,<br>Cumbum mettu road, Cumbum. | **ரூ. 48,500/–** |
| 2 | Er. D. Mohamed Risath,<br>MIGCS STRUCTURAL CONSULTANT<br>7A, Karat kadai street, Cumbum. | **ரூ. 52,000/-** |
| 3 | K.S. Constructions,<br>Er.S.K. Sasikumar,<br>123/W17, Kaliamman kovil street,<br>Cumbum. | **ரூ. 49,600/-** |

**<u>அலுவலகக்குறிப்பு..</u>** உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள DRAMS Engineers & Contractors, Er. D. AHMED ASHIQ. D.C.E., 3D/2 Opp, Saleema Hospital, Cumbum mettu road, Cumbum என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**17.** இந்நகராட்சிக்கு 2019–2020 ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக மன்ற தீர்மானம் அனுப்ப கோரியதன்படி , இந்நகராட்சி பகுதியில் திட்ட பிரேரணை செய்து புக் பைண்டிங் வடிவில் அமைத்திடவும், கணிணியில் கலர் புகைப்படம் மற்றும் வரைபடம் எடுத்து **சிப்பம்–2** பணிகள் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் செய்திட ஏதுவாக , கீழ்கண்ட நிறுவனங்களில் கலர்பிரிண்டிங் மற்றும் பைண்டிங் செய்திட உத்தேச செலவினம் ரூ. 50,000/–ல் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை பட்டியல் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | DRAMS Engineers & Contractors,<br>Er. D. AHMED ASHIQ. D.C.E.,<br>3D/2 Opp, Saleema Hospital,<br>Cumbum mettu road, Cumbum. | **ரூ. 48,500/–** |
| 2 | Er. D. Mohamed Risath,<br>MIGCS STRUCTURAL CONSULTANT<br>7A, Karat kadai street, Cumbum. | **ரூ. 52,000/-** |
| 3 | K.S. Constructions,<br>Er.S.K. Sasikumar,<br>123/W17, Kaliamman kovil street,<br>Cumbum. | **ரூ. 49,600/-** |

**<u>அலுவலகக்குறிப்பு..</u>** உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள DRAMS Engineers & Contractors, Er. D. AHMED ASHIQ. D.C.E., 3D/2 Opp, Saleema Hospital, Cumbum mettu road, Cumbum என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 18. | இந்நகராட்சிக்கு 2019–2020 ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக மன்ற தீர்மானம் அனுப்ப கோரியதன்படி , இந்நகராட்சி பகுதியில் திட்ட பிரேரணை செய்து புக் பைண்டிங் வடிவில் அமைத்திடவும், கணிணியில் கலர் புகைப்படம் மற்றும் வரைபடம் எடுத்து **சிப்பம்–3** பணிகள் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் செய்திட ஏதுவாக , கீழ்கண்ட நிறுவனங்களில் கலர்பிரிண்டிங் மற்றும் பைண்டிங் செய்திட உத்தேச செலவினம் ரூ. 50,000/–ல் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை பட்டியல் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | DRAMS Engineers & Contractors,<br>Er. D. AHMED ASHIQ. D.C.E.,<br>3D/2 Opp, Saleema Hospital,<br>Cumbum mettu road, Cumbum. | **ரூ. 48,500/–** |
| 2 | Er. D. Mohamed Risath,<br>MIGCS STRUCTURAL CONSULTANT<br>7A, Karat kadai street, Cumbum. | **ரூ. 52,000/-** |
| 3 | K.S. Constructions,<br>Er.S.K. Sasikumar,<br>123/W17, Kaliamman kovil street,<br>Cumbum. | **ரூ. 49,600/-** |

**<u>அலுவலகக்குறிப்பு..</u>** உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள DRAMS Engineers & Contractors, Er. D. AHMED ASHIQ. D.C.E., 3D/2 Opp, Saleema Hospital, Cumbum mettu road, Cumbum என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 19. | இந்நகராட்சிக்கு 2019–2020 ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக மன்ற தீர்மானம் அனுப்ப கோரியதன்படி , இந்நகராட்சி பகுதியில் திட்ட பிரேரணை செய்து புக் பைண்டிங் வடிவில் அமைத்திடவும், கணிணியில் கலர் புகைப்படம் மற்றும் வரைபடம் எடுத்து **சிப்பம்–4** பணிகள் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் செய்திட ஏதுவாக , கீழ்கண்ட நிறுவனங்களில் கலர்பிரிண்டிங் மற்றும் பைண்டிங் செய்திட உத்தேச செலவினம் ரூ. 50,000/–ல் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை பட்டியல் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | DRAMS Engineers & Contractors,<br>Er. D. AHMED ASHIQ. D.C.E.,<br>3D/2 Opp, Saleema Hospital,<br>Cumbum mettu road, Cumbum. | **ரூ. 48,500/–** |
| 2 | Er. D. Mohamed Risath,<br>MIGCS STRUCTURAL CONSULTANT<br>7A, Karat kadai street, Cumbum. | **ரூ. 52,000/-** |
| 3 | K.S. Constructions,<br>Er.S.K. Sasikumar,<br>123/W17, Kaliamman kovil street,<br>Cumbum. | **ரூ. 49,600/-** |

**<u>அலுவலகக்குறிப்பு..</u>** உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள DRAMS Engineers & Contractors, Er. D. AHMED ASHIQ. D.C.E., 3D/2 Opp, Saleema Hospital, Cumbum mettu road, Cumbum என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**20.** இந்நகராட்சிக்கு 2019–2020 ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக மன்ற தீர்மானம் அனுப்ப கோரியதன்படி , இந்நகராட்சி பகுதியில் திட்ட பிரேரணை செய்து புக் பைண்டிங் வடிவில் அமைத்திடவும், கணிணியில் கலர் புகைப்படம் மற்றும் வரைபடம் எடுத்து **சிப்பம்–5** பணிகள் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் செய்திட ஏதுவாக , கீழ்கண்ட நிறுவனங்களில் கலர்பிரிண்டிங் மற்றும் பைண்டிங் செய்திட உத்தேச செலவினம் ரூ. 50,000/–ல் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை பட்டியல் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | DRAMS Engineers & Contractors,<br>Er. D. AHMED ASHIQ. D.C.E.,<br>3D/2 Opp, Saleema Hospital,<br>Cumbum mettu road, Cumbum. | **ரூ. 48,500/–** |
| 2 | Er. D. Mohamed Risath,<br>MIGCS STRUCTURAL CONSULTANT<br>7A, Karat kadai street, Cumbum. | **ரூ. 52,000/-** |
| 3 | K.S. Constructions,<br>Er.S.K. Sasikumar,<br>123/W17, Kaliamman kovil street,<br>Cumbum. | **ரூ. 49,600/-** |

**<u>அலுவலகக்குறிப்பு..</u>** உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள DRAMS Engineers & Contractors, Er. D. AHMED ASHIQ. D.C.E., 3D/2 Opp, Saleema Hospital, Cumbum mettu road, Cumbum என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி,**
**ஆணையாளர்(பொ) மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 12.09. 2019**
**இடம். கம்பம்**